நீர்கொழும்பு மாநகர சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்கொழும்பு மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்கொழும்பு மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிககூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் *நியமங்களுக்கு* இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க மாநகர சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.2 (எ), தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை.

	குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.28 ஆம் பந்தியின் பிரகாரம் தொழிப்பாட்டு செயற்பாடுகளிலான காசப் பாய்ச்சல் கணிபபிடும் போது மீளாய்வாண்டின் மிகைக்காக ரூபா 69,893,082 என மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கம் என்ன என்பதறகான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்தவுடன் விரிவான வருமான செலவின கூற்றில் சீராக்கப்பட்ட வட்டி செலவினமான ரூபா 14,189,143 தொகை மிகைக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்வதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் ஆம் 3.30 பந்தியின் பிரகாரம் நிதி தொழிற்பாடுகளின் கீழ கணிப்பிடும் போது மீளாய்வாண்டில் நீண்டகால கடன் வட்டியாக ரூபா 14,189,142 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அது நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக் கொள்வதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் ஆம் 3.26 பந்தியின் பிரகாரம் இறுதி தேர்தல் உள்ளவாறு ரூபா 150,000,000 பெறுமதியான ஏழு நாள் அழைப்பு வைப்புக்களின் பெறுமதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை இதனால் நடைமுறை	எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும்.

	சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது .		
(ஈ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் ஆம் 3.7 பந்தியின் பிரகாரம் பாதீட்டு அறிக்கைகளில் பாதீடு செய்யபட்ட தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை . தயாரிக்க வேண்டும்.
(உ)	நியமத்தின் 06 ஆம் அத்தியாயத்தின் ஆம் 6.20 பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வகுப்பிலும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிறுவனத்தினால் பயன்படுத்திய பெறுமானத்தேய்வு முறை சொறத்தின் பயன்பாட்டு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்துெய்வு விகிதம் போன்ற தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஊ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.2 (ஆ) பந்திக்கும் மற்றும் 2.4 -ஆம் பகுதிக்கும் இணங்காத வகையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாதிருக்கையில் 35 சந்தர்ப்பங்களில் உரிய ரூபா 480,517,019 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டு இருந்தது.	எதிர்காலத்தி ல் இவ்வாறான தவறுகள் இடம் பெறாமல இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றை . தயாரிக்க வேண்டும். .
(எ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் 2.2 (ஆ) பந்திக்கும் மற்றும் 2.4 -ஆம் பகுதிக்கும் இணங்காத வகையில் ரூபா 18,637,433 பெறுமதியான வழங்குனரால் ஒதுக்கீடு செய்யப்படாத இருந்த மற்றும் பௌதீக ரீதியாக கிடைக்காத இருந்த பொருட்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	அப் பொருட்களை கொண்டு வந்த பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு கடன்கொடுத் தோர் ஒதுக்கீடு செய்யப்பட்ட தாக.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஏ)	2021 பெப்ரவரி 12 ஆம் திகதிய LGD/10A/4/ ந.கி/2019 இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் 14 தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களில் சரியான சொத்து பகுதிகளில் இனங்காண்பதற்குடு பதிலாக ரூபா 29,225,439 ஏனையவை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.	2025 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்வதாக.	சுற்றறிக்கைக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஜனவரி மாதத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட காமச்சோலை பொது வியாபாரச் சந்தையின் நிர்மாணத்திற்கான ஆரம்ப மதிப்பீட்டின் பெறுமதி 50 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தலின் அடிப்படையில் ரூபா 232,853,762 ஆக இருந்ததுடன், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 116,426,881 வேலைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் நடைபெற்று வரும் வேலையின் பெறுமதி ரூபா 116,426,881 ஆக இருந்திருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 635,220,807 ஆக, ரூபா 518,793,926 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கொடுப்பனவு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டு கடன்கொடுத் தோருக்கு ஒதுக்கீடு செய்யபபட்டுள ள்தாக .	சரியான பெறுமதி கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2023 செப்டம்பர் முதல் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 34,377,634 பெறுமதியான (உள்ளீட்டு) வரிகள் கணக்கிடப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக .	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	ரூபா 626,821,982 மதிப்பீட்டுப் பெறுமதியான புதிய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கான ஒப்பந்தத்தின் முதல் மற்றும் இரண்டாவது பட்டியல் மூலம் ரூபா 313,410,991 தொகை செலுத்தப்பட்டிருந்தன. அதன்படி, பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி எனக் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 461,223,089 என ரூபா 147,812,098 அதிகமாக காட்டப்பட்டிருந்தது.	கட்டிடத்தின் மீதமுள்ள பணிகளுக்கு கடன் கொடுத்தோர் ள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளதாக .	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	ஸ்மார்ட் நகர எண்ணக்கருவை உருவாக்கு வதற்கான ஈ சேவைகளை வழங்குவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,450,000 மற்றும் NECFA மென்பொருளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,145,000 ஆகியவை கணினி மென்பொருளின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக கணினிகள் மற்றும் உப பாகங்களிகள் கீழ் காண்பிக்கபட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் பெறப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 5,661,484 மீளாய்வாண்டின் விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியின் கீழ் காட்டப்பட்டது.	எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	2021 முதல் 2023 வரை வாங்கப்பட்ட ரூபா 111,871,007 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான தேய்மான பெறுமதி ரூபா 11,242,872 கணக்கீடு செய்யடப்பட்டிருக்கவில்லை, அதன்படி, மிகை மற்றும் நடப்பு அல்லாத சொத்துக்கள் அந்தத் தொகையால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.	2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	முன்னைய ஆண்டின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 244,569,493 கணக்கீட்டுக் குறைபாடுகள் சரிசெய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அவை சரி செய்யப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதாக	கணக்குகளை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	முன்னைய ஆண்டுகளில் மூலதன மானியங்களின் கீழ் பெறப்பட்ட சொத்துக்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட வேண்டிய தேய்மானச் செலவிற்குச் சமமான பெறுமதி பிற விரிவான வருமானத்தின் கீழ் மிகை அல்லது பற்றாக்குறையில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனச் செலவின மானியங்களாகவும், வருவாயில் மீண்டும் நிகழாத வருமானம் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தால் செய்யப்பட்ட மாற்றல்களாகவும் காட்டப்படாததால், மீளாய்வாண்டின் விரிவான வருமானம் மற்றும் ஏனைய விரிவான வருமானம் அந்தத் தொகையால் குறைவாகக் காட்டப்பட்டன.	2025 ஆம் ஆண்டின் போது பெறுமானத் தேய்வை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	கணக்குகை ள சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுகளில் காணப்படும் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதி அவற்றிற்குரிய பயன்பாட்டு ஆவணங்களில் மிதிகளுக்கு இடையே ஒப்பிடும் போது ரூபா 43,327,811 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.	ஏதிர் காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	அட்டவணைகள் புதுப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் சரிசெய்யப்பட வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ரூபா 26,982,070 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பான விரிவான அட்டவணைகளைச் சமர்ப்பிக்கத் தவறியதால், திருப்திகரமான மெய்மையாய்வை செய்ய முடியாதிருந்தது.	அட்டவணைகளைச் சமர்ப்பிப்பதற்காக.	நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்கு நிலுவைகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2019 திசெம்பர் 24 திகதிய மா நகர சபையின் நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கு விடயங்கள் குறித்த கட்டளைகள்.			
(i) 310	மா நகர சபையால் வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள், உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொது கணக்கீட்டு நியமங்களின் படி உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் குறித்துரைக்கப்பட்ட ஒரு பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில், உள்ளூராட்சி ஆணையாளரால் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தின் பிரகாரம் ஒரு பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) 312	நீர்கொழும்பு பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கழிப்பறை அமைப்பு, ராஜபக்ஷ ஐஸ்கிரீம் பார்லர், எட்டுக்கலா பீச் பார்க் கார் நிறுத்துமிடம் மற்றும்	எதிர்காலத்தில் நிபந்தனை யொன்றை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்	நிதி நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கழிப்பறை ஆகியவற்றின் சொத்துக்களை குத்தகைக்கு எடுப்பதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் மாதாந்த வாடகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை சேர்க்கப்படவில்லை.	என்று கூறப்படுகிறது.	
(iii) 395	வருடாந்த குத்தகை/வாடகை ஒரு நிதியாண்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், சபையால் பெமப்பருவத்த 2014 முதல் அதே நிறுவனத்திற்கு ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்கும் பல மாதங்களுக்கும் மற்றும் 2024 ஜூலை 01 முதல் 2025 திசெம்பர் 31 வரை 1 1/2 ஆண்டுகளுக்கும் தற்காலிக வாகன நிறுத்துமிடமாக குத்தகைக்கு எடுத்துள்ளது.	முறையான கேள்வி நடை முறையின் கீழ் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7.2 வரி தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2019 ஜூலை 09 ஆந் திகதிய GIR/2019/03-1 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகத்தின் (Ins.cir) சுற்றறிக்கையின் படி, செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி குறித்த தகவல்களை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மாதிரியின் பிரகாரம் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும், வழங்குனர்கள் தொடர்பான ரூபா 41,055,077 பெறுமதியான உள்ளீட்டு வரி விவரங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்க அனுப்பப்படவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்யப்பட வேண்டும்.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 192,294,551 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 204,958,275 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		000' ரூபா	000' ரூபா	000' ரூபா	000' ரூபா	000' ரூபா	000' ரூபா	000' ரூபா	000' ரூபா
(i)	வீதவரியும் வரியும்	200,986	256,886	209,067	205,584	167,173	196,520	167,191	227,696
(ii)	வாடகை	335,008	103,674	103,738	38,338	88,791	86,354	86,354	39,103
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	20,653	28,649	28,657	831	15,956	23,997	24,060	2,298
(iv)	ஏனைய வருமானம்	918,066	727,063	728,846	13,042	828,788	824,451	829,385	15,692
		---------	----------	--------	---------	------------	-----------	-------------	-------
		1,474,713	,1116,272	,1070,308	257,795	1,100.708	1,131,322	1,106,990	284,789

2.2.2 வாடகை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காமச்சோலை ஞாயிறு சந்தை நடைபெற்ற நாட்களுக்கான ரூபா 2,371,000 ஆன நிலுவை வாடகையை குத்தகையாளார் நகர சபையில் வைப்புச் செய்யப்பட்ட தினத்திலிருந்து தொகையை அறவிட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 22,452,225 ஆன அபராதத் தொகையும் ரூபா 23,710 ஆன முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிட வேண்டிய தொகை குத்தகையாளரிடமிருந்து அறவிட்படும் என்பதாக.	அபராதம் மற்றும் முத்திரைத் தீர்வையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டில், சம்பந்தப்பட்ட கேள்விதாரர் சலுகைக் காலத்திற்குப் பிறகு தவணை பணம் செலுத்தும் போது, அதற்காக 5 சதவீத அபராதத்தின் மீது காமச்சோடை ஞாயிறு சந்கைக்கு ரூபா 782,550 மற்றும் காமச்சோடை புதன்கிழமை வாரச் சந்தைக்கு ரூபா 807,700 என்ற அடிப்படையில் அறவிப்பட்டிருக்கவில்லை, அத்துடன் காமச்சோடை புதன்கிழமை வாரச்சந்தைக்கு 2024 ஜனவரி 01, முதல் 2024 ஜூன் 30 வரையிலான	அறவிட வேண்டிய தொகையை குத்தகையாளரிடமிருந்து அறவிட்படும் என்பதாக.	அபராதம் மற்றும் முத்திரைத் தீர்வையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலத்திற்கான நிலுவையில் உள்ள நியாயமான தவணை பெறுமதிக்காக அறவிடப்படப்பட வேண்டிய ரூபா 13,882,969 அபராதத்தையும் ரூபா 12,769 முத்திரை வரியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	புரிந்துரை
(அ) உப உறுப்புரை		
மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரிவுகள் 267 மற்றும் 272 இன் படி ஒரு வாகன நிறுத்துமிடத்தை பராமரிக்கவும் கட்டணம் அறவிடுவதற்கும் நகரசபை ஒரு துணைச் சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற வேண்டும் என்றபோதிலும், நீர்கொழும்பு பகுதியில் உள்ள பழைய சிலாப பாதை பாலத்திலிருந்து முஸ்லிம் பள்ளிவாயலுக்குச் செல்லும் பாதையிலும், காமச்சோடை வாராந்த சந்தைக்கு முன்பாகவும் பராமரிக்கப்படும் வாகன நிறுத்துமிடங்கள் குறித்து எந்த துணைச் சட்டங்களும் தயாரிக்கப்படவில்லை.	அது அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.	மாநகர சபை கட்டளைச் சட்டத்தின்படி துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்		
(i) மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) பிரிவு இலக்கம் 04, 96 மற்றும் 100 மற்றும் 2008 ஜூலை 30 ம் திகதியுடைய 2008 ம் ஆண்டின் 1 ம் இலக்க மேல் மாகாண நகர திண்மக் கழிவு முகாமைத்துவ விதிகள் பிரகாரம் பொது வடிகால்கள் மற்றும் பாதைகளை சுத்தம் செய்வதற்கு அல்லது சுத்தம் செய்ய வைப்பதற்கு நகரசபையே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பு என்ற போதிலும் அந்தப் பணியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	சுத்தம் செய்தல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	சட்டங்களின்படி செயற்பட்டு நகரத்தை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை வேண்டும்.
(ii) நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதி மற்றும் நகரசபை அதிகார வரம்பிற்குள் உள்ள பாதைகளில் உள்ள வடிகால்கள் சேறு மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்ற குப்பைகளால் அடைக்கப்பட்டு, தண்ணீர் தேங்கி டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவி பொதுமக்கள் பாதிக்கப்படுவதையும் கணக்காய்வு அவதானித்தது.	போதுமான சுகாதார ஊழியர்கள் இல்லாததால் சிக்கல்கள் எழுகின்றன..	வடிகால் அமைப்பை தொடர்ந்து சுத்தமாக பராமரிப்பதன் மூலம் தொற்று நோய்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	புரிந்துரை
(அ)	2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, மொத்தம் ரூபா. 295,790,039 பெறுமதியான 18 வெவ்வேறு கடன் வழங்குநர் நிலுவைகளை தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	7 இருப்புக் கடன் வழங்குநர் நிலுவைகள் மட்டுமே தீர்க்கப்பட வேண்டியுள்ளன.	இருப்பை விசாரித்து கடன் வழங்குநர் நிலுவைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1981 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா. 2,172,222 பெறுமதியான 81 வெவ்வேறு கடன்பட்டோர் மீதிகள் மற்றும், 1986 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா. 693,676 பெறுமதியான 39 களஞ்சிய கடனபட்டோர் என மொத்தம் 2,865,898 ஆக மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கடவில்லை.	தீர்ப்பதற்கான தகவல்கள் தேடப்பட்டு வருகின்றன	நிலுவையில் உள்ள தொகைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1991 முதல் 2017 வரை மொத்தம் ரூபா. 879,975 பெறுமதியான 51 நிராகரிக்கப்பட்ட காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு அவற்றை அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	தீர்ப்பதற்கான தகவல்கள் தேடப்பட்டு வருகின்றன	நிராகரிக்கப்பட்ட காசோலை நிலுவைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் LGD/10A/4/N.G./ 2019, ஆம் இலக்கம் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின்படி அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், சபைக்கு சொந்தமான காணி மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற சபையின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.	கணக்கில் பதிவு மேற்கொள்ளப்படுகிறது.	சொத்துக்களை அடையாளம் கண்டு, மீள்மதிப்பீடு செய்து கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும்.
(உ)	சபைக்குச் சொந்தமான 26 கட்டிடங்களிற்கான வரிப்பண அறவீட்டிற்காக வருமான மதிப்பீட்டாளர்காளால் வழங்கப்பட்ட ரூபா. 7,047,317 வருடாந்த மதிப்பீட்டு பெறுமதி, நிதிநிலை அறிக்கைகளில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பாகக் காட்டப்பட்டுள்ளதாக முந்தைய ஆண்டுகளில், கணக்காய்வினூடாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில் மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக அதை மதிப்பிடுவதாக குறிப்பிட்டாலும் , மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.	மதிப்பீட்டுப் பணி எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படும்.	வைத்திருக்கும் தொகை நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மா நகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கீட்டு விதிமுறைகள் தொடர்பான 317(i)(ii)(iii) மற்றும் 398 இற்கு இணங்கா வகையில் பட்டய மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் பழைய சிலாபம் வீதியில் உள்ள கார் நிறுத்துமிடம் மாதத்திற்கு ரூபா 60,000 இற்கும், காமச்சோட வாரச்சந்தையின் முன் உள்ள கார் நிறுத்துமிடம் மாதத்திற்கு ரூபா 20,000 க்கும் குத்தகைக்கு விடப்பட்டது, முன்னைய குத்தகைதாரர்களின் வேண்டுகோளின் பேரில், தொடர்ந்தும் டம்பெற்று வந்தன.	2025 ஆம் ஆண்டில் கேள்வி கோரி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக.	முறையான மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2017 ஒக்டோபர் 23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இரண்டு வருட காலத்திற்கு தபரும்வத்த வாகன நிறுத்துமிடத்திற்கான மாத வாடகையை ரூபா 220,000 என விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டிருந்தது, ஆனால் நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் 2018 ஜனவரி 01 ஆந் முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்கு ரூபா 430,000 கட்டணம் அறவிடப்பட்டதால், அந்த வாடகைக்கு ரூபா 4,850,000 வருமானம் இழந்திருந்தது. 2020 ஆம் ஆண்டிற்கான புதிய மதிப்பீடு ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், புதிய மதிப்பீடொன்றைப் பெற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	கேள்வி கோரப்பட்ட போதிலும், யாரும் முன் வரவில்லை.	புதிய மதிப்பீட்டைப் பெற்று, கேள்வி நடைமுறையின் பிரகாரம் வரி செலுத்தப்பட வேண்டும்.
(இ)	2019 ஒக்டோபர் 03 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் குழுவினால், சபைக்குச் சொந்தமான இடங்களில் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, முந்தைய சேவை வழங்குநரின் வேண்டுகோளின் பேரில் சேவை ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்தது	எதிர்காலத்தில் பெறுகை முறைமையின் படி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். என்பதாக.	அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சனிக்கிழமை இரவு சந்தையின் குத்தகை தொடர்பான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் காணப்பட்டன:		
	(i) 2019 ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு பெற்றுக் கொண்ட அதே குத்தகைதாரருக்கே முன்னைய ஆண்டின் குத்தகைத் தொகையை விட 5 சதவீதம் அதிகரித்த குத்தகைத் தொகைக்கு சொத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு பொதுச் சபை ஏற்றுக் கொள்ளப்பட்டது, 2022 முதல் 2024 ஜூன் 30 வரை குத்தகைக்கு வழங்கல் இடம்பெற்றிருந்ததுடன் 2024 ஜூலை 01, முதல் 1 ½ ஆண்டுகளுக்கு ஒரு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 18,960,000 மற்றும் ரூபா 18,000,000 என கூடிய கூறுவிலைகள் முன்வைக்கப்பட்டிருக்கையில் ரூபா 17,680,000 இற்கு சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாவது கூடிய விலைக்க கேள்வி வழங்கப்பட்டிருந்தது.	2026 முதல் ஓராண்டு ஆண்டு அடிப்படையில் குத்தகை வழங்கப்படும் என்பதாக	பெறுகை செயல்முறையின் படி குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 23 இன் படி அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்குள் மட்டுமே கண்காட்சியை நடத்தி கட்டணம் அறவி ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தாலும், குத்தகைதாரர் சனிக்கிழமைகளில் இலங்கை வங்கிக்கு அருகில் இருந்து பழைய ரீகல் சினிமா வளாகம் வரை தற்காலிக கடைகளிலிருந்தும் கட்டணம் வசூலிப்பதாகவும், அந்த நாட்களில் அந்த தற்காலிக கடைகளிலிருந்து கவுன்சில் கட்டணம் அறவிடவில்லைல என்றும் தெரியவந்தது.	குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக	குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும்.
(iii)	சனிக்கிழமை இரவு சந்தைக்கான குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 08 இன் பிரகாரம், நிபந்தனை 02 ஆம் இலக்க நிபந்தனை மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட சந்தைக் கட்டணங்கள் சந்தை திகதிக்குப் பிறகு 10 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால், 10 நாட்கள் சலுகைக் காலத்தைத் தவிர்த்து, அடுத்த நாளிலிருந்து ஒரு நாளைக்கு 5 சதவீதம் அபராதம் செலுத்த இரண்டாவது தரப்பினர் ஒப்புக்கொண்டிருந்த போதும், 2024 ஆம் ஆண்டுக்கான குத்தகை தொகையை சபைக்கு செலுத்தும் போது, மேற்கூறிய காலத்தை மீறிய 21 வாரங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,734,375 அபராதத்தை அறவிடுவதற்கு மன்றம் நடவடிக்கை எடுக்கவில்லை.	நிலுவை குத்தகை தொகையை செலுத்துமாறு குத்தகையாளர்களுக்கு அறிவிக்கபட்டுள்ளதாக	குத்தகை ஒப்பந்தத்தின்படி, பணத்தை சரியான நேரத்தில் அறவிடவும், அபராதங்களுடன் நிலுவைத் தொகையை அறசிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நீர்கொழும்பு நகரில் அடையாளம் காணப்பட்ட நான்கு இடங்களில் 49 நிலத் துண்டுகளில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு 2024 திசெம்பர 5 முதல் 2025 ஜனவரி 5, வரையிலான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதில், நகர சபையால சபையின் நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கீட்டு நடைமுறைகள் தொடர்பான கட்டளை 316(i), 318, 320, 322 (iii), 350, 353, 370 மற்றும் 377 ஆகியவற்றின் பிரகாரம் நகர சபை செயல்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் விதிமுறைகளின் படி அந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	நிதி நிர்வாக கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	கிரீன் பார்க் அரங்கிக்கு எதிரே உள்ள 10 மற்றும் 13 ஆம் இலக்க கடைகளுக்கும், IOC ஷெட்டுக்கு எதிரே உள்ள 06 ஆம் இலக்க கடைக்கும் முறையே ரூபா 60,000, ரூபா 55,000 மற்றும் ரூபா 65,000 வருமானம் கிடைத்த போதிலும், அந்தக் கடைகளை குத்தகைக்கு பற்ற பதிவு செய்யப்பட்ட நபர்கள் தலா ரூபா 100,000 மற்றும் ரூபா 140,000 தொகைக்கு உப குத்தகைக்கு வழங்கியிருந்னனர.	இது குறித்து சபைக்கு அறிவிக்கப்படவில்லை	சட்ட விதிகளின் பிரகாரம், உப குத்தகைக்கு வழங்கப்பட்டால், அனுமதியை அனுமதியைப் பெற வேண்டும்.
.(எ)	ஏத்துக்கலை கடற்கரை பூங்காவை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்த 2023 ஜனவரி 10 ஆந் திகதி பொதுச் சபை முன்மொழிந்திருந்த போதிலும், இந்தச் சொத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றுவதற்கான பொருத்தமான பரிந்துரை அறிக்கைகள் நீர்கொழும்பு பிரதேச செயலாளரின் கடிதம் மூலம் காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் எந்த கவனமும் எடுக்காமல், இந்த சொத்தை 2024 ஜுலை 01, முதல் 2025 திசெம்பர் 31, வரையிலான காலத்திற்கு கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	2023 ஜுலை 01, முதல் 2024 ஜுன் 30, வரை குத்தகை வழங்கப்பட்டுள்ளதுன் 2023 செப்டம்பர் 12 திகதிய கடிதத்தின் மூலம் மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக	மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் குத்தகைக்கு வழங்கி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஏ) கிறிஸ்மஸ் பருவ காலப்பகுதியில் நீர்கொழும்பில் தற்காலிக கடைகளுக்கான காணி குத்தகை தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாநகர சபை மன்றத்தின் நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கீட்டு நடவடிக்கை தொடர்பான 398 ஆவது கட்டளையின் படி, சொத்துக்களுக்கான கேள்வி பெறுமதி ஒரு பட்டய மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றாலும், ஆண்டுதோறும் திசெம்பர் மாதத்திற்கு தற்காலிகமாக குத்தகைக்கு விடப்படும் இந்த சொத்து தொடர்பாக, 2024 பெப்ரவரி 15 ஆந் திகதிய மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் கிறிஸ்மஸ் காலத்திற்கான தற்காலிக கடைகளை குத்தகைகளை வழங்கும் போது, நகர சபை அரச மதிப்பீட்டைப் பெறாமல் தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கப்பட்ட 10x10, 05x10, 08x08 மற்றும் 6x10 அடி அளவிலான காணிகளுக்காக ரூபா 40,000 முதல் ரூபா 100,000 வரை குறைந்த பெறுமதிகளைக் குறித்த கேள்விகளை வழங்கியிருந்ததுடன் சபை தற்காலிக கடைகளுக்கான உடன்படிக்களை மேற்கொண்டு இருக்கவில்லை.	தற்காலிக மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு, கட்டணங்கள் நகர ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக	ஒரு பட்டய மதிப்பீட்டாளரின் ஒரு மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகப் பயன்படுத்தி ஒப்பந்தம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
(ii) ரயில் நிலையத்திற்கு முன்னால் உள்ள 1 ஆம் 2 ஆம் இலக்க இரண்டு தற்காலிக கடைகள் கூறுவிலை கோரப்பட்டதில் தாமதம் ஒன்று இருந்த போதிலும், நகர ஆணையாளர், இது தொடர்பாக எதைளுக் கருத்தில் கொள்ளாமலும், கேள்வி குழுக்கள் அல்லது மதிப்பீட்டுக் குழுக்கள் அல்லது வேறு எந்த படிவத்திடமிருந்தும் எந்த நியாயப்படுத்தும் அறிக்கை யொன்றையும் பெற்றுக் கொள்ளாமலும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின் சராசரியைக் கணக்கிட்டு, தொடர்புடைய தொகையை அறிவிடுமாறு கேள்விதாரர்களிடம் தெரிவித்தார். எனவே, கேள்விதாரர் சமர்ப்பித்த கூடிய விலையில் ஒப்பந்தத்தை வழங்குவதன் மூலம் பெறக்கூடிய ரூபா 135,000 வருமானத்தை சபை இழந்துள்ளது.	சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின் சராசரியின் அடிப்படையில் கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக	சபைக்கு பெற வேண்டிய கூடிய வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
நூலகத்திற்காக முதலாம் மாடியும் தரைத்தளத்தை வணிக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்த 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2025 மே 18 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 09 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த கட்டிடத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பொது சேவைகள் வழங்குவது ஆரம்பிக்கப்படவில்லை.	அரசாங்கத்தின் மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதத்தால் வணிகப் பகுதியின் குத்தகை வழங்குவதை தாமதமாகியுள்ளதாக	பொது சொத்துக்களை மிகவும் செயற்திறனான முறையில் பயன்படுத்த வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 ஆம் ஆண்டு அரசு பெறுகை வழிகாட்டல்களின் வழிகாட்டுதல் 4.2 வழிகாட்டலின் மற்றும் பெறுகை கையேட்டின் 4.2.1 படிவம் ஆகியவற்றின் பிரகாரம் ஒரு பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் வழிகாட்டுதல்களின் 4.2.1(ஆ) பிரகாரம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட வேண்டும். இருப்பினும், நிறுவனத்தினால் ஒரு பிரதான பெறுகை திட்டத்தை தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2020 முதல் 2024 வரை தயாரிக்கப்பட்ட வருடாந்த பெறுகை திட்டங்களில் பாதுகாப்பு சேவைகளைப் பெறுவதற்கான பெறுகை செயல்முறை உள்ளடக்கப்படவில்லை.	2025 இல் பெறுகை குழுவொன்று நியமிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என.	பெறுகை வழிகாட்டுதல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2006 ஆம் ஆண்டு அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்களின் 2.4.1 இன் படி, பெறுகை குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் முழு பெறுகை செயல்முறைக்கும் பொறுப்பாக இருந்தாலும், ராஜபக்ஷ பூங்கா மற்றும் அதன் வளாகத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்க நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை செயல்முறைக்கு ஒரு பெறுகை குழுவொன்று நியமிக்கப்படவில்லை.	2025 இல் பெறுகை குழுவொன்று நியமிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என.	பெறுகை வழிகாட்டுதல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	நிறுவனம் ஒன்றினால் 2 வருட உத்தரவாதக் காலத்துடன் 40 வொட் LED மின்குமிழ்களை ஒரு அலகு ரூபா 2,410 விலையில் வழங்குவதற்கு முன்வந்திருக்கும் போது 2024 சனவரி 01 2024 ஆகஸ்ட் 30 வரையான காலப்பகுதி வரை சபையால் மற்றொரு நிறுவனத்திடமிருந்து ஒரு அலகு ரூபா 4,140 வீதம் வொட் 40 LED 1,175 மின் குமிழ்களை கூடிய விலையில் கொள்வனவு செய்திருந்தது, இதன் மூலம் ரூபா 2,032,750 கூடுதலான கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.	I 65 தொழில் நுட்பத்துடனான மின்குமிழ் தெரிவு செய்யப்பட்டதாக	கிரய நலன் தொர்பாக கொள்வனவின் போது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	புரிந்துரை
(அ)	வணிக வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி நூலகக் கட்டிடத்தின் நிர்மாணத்தில் மீதமுள்ள பணிகளை பூரணப்படுத்தல் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன		
(i)	வணிக வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி நூலகக் கட்டிடத்தின் நிர்மாணத்தை மேற்கொண்ட ஆரம்ப ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறன் காரணமாக ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டாலும், ரூபா. 7,855,091 தொகையை	செயல்திறன் பத்திரம் இரத்தாகியுள்ளது டன், முன்பண உத்தரவாதத்தை	ஒப்பந்தம் மீறப்படும் சந்தர்பங்களில் ஒப்பந்த பிரகாரம் அவற்றை

பெறுமதியான செயல்திறன் பத்திரத்தை பணமாக்காமையால் சபையின் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா. 7,855,091 நிதி மற்றும் 2019 நவம்பர் 20 ஆந் திகதி முதல் அதன் நலன்களும் இல்லாமல் போயிருந்தது.	பணமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள து.	கையாள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) வெளிப்படையான முறையில் நிர்மாணத்திற்கு பொருத்தமான ஆலோசகர் மற்றும் ஒப்பந்ததாரரைப் பெறத் தவறியதால், நிர்மாணப் பணிகளின் திறனற்ற முறையில் மேற்பார்வை செய்யப்பட்டது. இதன் விளைவாக 2017 ஜூன் 23 அன்று ரூபா. 157,101,803 க்கு முடிக்கப்பட வேண்டிய நூலகக் கட்டிடத்தின் நிர்மாணம் இடையில் நிறுத்தப்பட்டது. பின்னர் 2024 செப்டம்பர் 09, அன்று மீதமுள்ள பணிகளை நிறைவுசெய்த ஒப்பந்ததாரருக்கு பணவீக்கம் காரணமாக விலை ஏற்ற இறக்கங்கள் உட்பட ரூபா. 206,393,566 செலுத்த வேண்டியிருந்ததுடன் முழுமையான இரண்டு மாடி கட்டிடத்தை கட்டுவதற்கு ரூபா 313,410,992 இனை செலுத்த வேண்டி ஏற்பட்டது.	கேள்வி நடைமுறையின்ப டி தொடர்புடைய நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்ப ட்டன.	திறனின்மை அவதானிக்கப்பட்ட நிலையிலும் ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசனை நிறுவனத்துக்கு பணம் செலுத்தியமைக்கா ன காரணங்கள் விசாரிக்கப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) காமச்சோடை டட்லி சேனநாயக்க மத்திய சந்தை கட்டிடத்தின் (கட்டம் 01) நிர்மாண ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i) 2023 ஜனவரி 18, 2023 அன்று ரூபா. 479,642,845 மதிப்புடன் 2023 ஒக்டோபர் 12 நிரடமபணப்பணிகளை நிறைவு செய்வதற்கு ஒப்பந்தம மேற்கொள்ளப்பட்டிருந்த 3 மாடியுடைய நிர்மாணத்தின் அளவு 2 தளங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்த ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் ரூபா. 99,240,517 முன்பணம் செலுத்தப்பட்டிருந்தது.	பட்டியல் ஊடாக தவணை முறையில் அறவிடப்படும். தேசிய கொள்வனவு வழிகாட்டுதல் கள் துணை மற்றும் ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்ப டி பணிகள் செய்யப்பட வேண்டும்.	தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்கள் துணைப்பிரிவு மற்றும் ஒப்பந்த் விதிமுறைகளின்ப டி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ii) ஒப்பந்தத்தின் பிரிவு 8.7 நிபந்தனையின் படி நியாயமான காரணங்களுக்காக ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், கொடுக்கப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும். எனவே, 382 நாட்களுக்கு ஒரு நாளைக்கு ரூபா. 119,911 வீதம் ரூபா. 45.8 மில்லியன் தாமதக் கட்டணம் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டி போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக	ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்ப டி தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். .

(iii) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (CIDA) ஜூன் 2009 இல் வெளியிட்ட அறிவிப்பு இசக்கம் (I.CTAD/1D/04) இன் இரண்டாவது பதிப்பின்படி, காப்பீடு மற்றும் பாதுகாப்பு ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான உண்மையான செலவு மற்றும் அதன் மீது 5 சதவீத கட்டணம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் அந்த வரம்பு இருந்தபோதிலும், குறித்த வரம்பு தொடர்பில் கரிசனை கொள்ளாது நிதி நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோருக்கு ஏற்பட்ட செலவு தொடர்பில் தகவல் பெறாது விடய இலக்கம் B11, B12 ஊடாக இன் கீழ் முறையே ரூபா. 734,085 மற்றும் ரூபா. 1,404,335 இனை செலுத்தியுள்ளனர். அதேபோல், பிற தரப்பினருக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்தாமல் முதன்மை வேலை B17 இன் கீழ் ரூபா. 175,000 செலுத்தப்பட்டுள்ளது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv) ஒப்பந்தக்காரரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 488,776,124 ஆபத்து காப்புறுதிக்காக ரூபா 308,887 தொகை காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய இருந்த போதிலும், ஆலோசனை நிறுவனம் பல்வேறு வகையான காப்புறுதிகளின் கீழ் ரூபா 1,367,615 உறுதிப்படுத்தி கொடுப்பனவினை மேற்கொண்டிருந்தது. மேலும், ஒப்பந்த காலம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டதன் பிரகாரம் காப்புறுதி பாதுகாப்பு மேவுகை நீடிக்கப்பட்டிருக்கவில்லை	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v) 2025 பெப்ரவரி 18, அன்று நடத்தப்பட்ட பௌதீக கணக்காயவின்படி, மேற்படி நிர்மாணம் தொடர்பாக பட்டியல் இலக்கம் 07 இல் பணம் செலுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• விடயத் தலைப்பு B18 இன் கீழ், 100 சதுர மீட்டருக்குக் குறையாத, பத்து நபர்களுக்குப் போதுமான, வசதிகளை வழங்குவதற்காக குளிரூட்டப்பட்ட ஒரு தற்காலிக அலுவலகக் கட்டிடத்தைப் பராமரித்து பின்னர் அகற்றுவதற்காக வேலைத்தளப் பொறியாளருக்கு ரூபா. 378,450 வழங்கப்பட்டது, ஆனால் பௌதிக ரீதியான பரிசோதனையில் அது 7.5×20 அடி நீளம் மற்றும் அகலம் கொண்ட, அதாவது 13.5 சதுர மீட்டர் அளவுள்ள, கழிப்பறைகள் இல்லாத ஒரு தற்காலிக அலுவலக வளாகம் மட்டுமேயாகும்.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

• விடய இலக்கம் B 21 இன் கீழ் 20 பேருக்கு குளிரூட்டப்பட்ட கூட்ட மண்டபம் நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக ரூபா. 233,750 செலுத்தப்பட்டாலும், அத்தகைய கட்டிடம் ஒதுக்கப்படவோ அல்லது பயன்படுத்தப்படவோ இல்லை. மேலும் நிர்மாணம் தொடர்பான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மாநகரசபை அலுவலகத்தில் நடாத்தப்பட்டன.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• விடய இலக்கம் B19 இன் கீழ் தொலைபேசி, மின்சாரம், தொலைநகல் மற்றும் நீர் வழங்குவதற்காக ரூபா. 199,750 ரூபாய் செலுத்தப்பட்ட நிலையில், விடய இலக்கம் B20 மூலம் தொடரபாடல் சேவைகளைப் பயன்படுத்துவதற்காக ரூபா. 66,000 ரூபாய் செலுத்தப்பட்டிருந்தது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• வேலைத்தள ஊழியர்களுக்கான ஓய்வு பகுதிகள் மற்றும் கழிப்பறைகளைக் கொண்ட தற்காலிக அலுவலகக் கட்டிடத்திற்கு ரூபா. 780,030 செலுத்தப்பட்ட போதிலும், கழிப்பறைகள் மற்றும் ஓய்வு வசதிகள் இல்லாத 13.5 சதுர மீட்டர் கேபின் ஒன்று காணப்பட்டதுடன் , கணக்காய்வு திகதியான 2025 பெப்ரவரி 18, அன்று ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்பே அது அகற்றப்பட்டது என்பதும் கணக்காய்வில் தெரியவந்தது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• கட்டடக்கலைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளபடி நிலத்தின் பரப்பளவு குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அங்கு எதையும் பதிவு செய்யாமல் அதை ஒரு சேமிப்பகமாகப் பயன்படுத்துவதற்காக ரூபா. 225,000 செலுத்தப்பட்டுள்ளது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• விடய இலக்கம் B 28 இன் கீழ் ஊழியர்களுக்கு சமையலறை, உணவகம் மற்றும் ஓய்வு அறைக்கான அறையை பணியாளர்களுக்க வழங்குவதற்காக ரூபா. 229,500 செலுத்தப்பட்டிருந்தாலும், அத்தகையதொரு வளாகங்கம் அங்கு காணப்படவில்லை என்பதுடன் பணியாளர் ஓய்வு அறைக்கும் விடய	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைகளை

இலக்கம் B 26 இன் கீழ் பணம் செலுத்தப்படடிருந்தது.		எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• விடய இலக்கம் B 26 இன் கீழ், நிர்மாணப் பணியாளர்களுக்கான சுகாதாரம் மற்றும் பணியாளர் போக்குவரத்து செலவுகள் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலும் விடய இலக்கம் B 29 கீழும் ரூபா. 325,600 செலுத்தப்பட்டுள்ளது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• விடய இலக்கம் B 33 முதல் B 42 வரை, ஒப்பந்ததாரர் வசதிகள், பொறியாளர் வசதிகள் ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை, குடியிருப்பாளர், பொறியலாளர், தரக் கட்டுப்பாட்டு பொறியலாளர், தள பாதுகாப்பு அதிகாரி, தொழில்நுட்ப அதிகாரி மின்சாரம், குளிரூட்டி தொழில்நுட்ப அதிகாரி, அளவையாளர், வடிவமைப்பாளர், நிர்மாண மேற்பார்வையாளர் (ஃபோர்மேன்) மற்றும் மேலதிக தொழில்நுட்ப அதிகாரி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 6,190,000,000 இல், ரூபா. 4,256,550, நிபுணர்களைப் பற்றிய தகவல்களை வழங்காமலும், இந்த நிர்மாணங்களின் வளர்ச்சிக்கு அந்த நிபுணர்கள் பங்களித்ததை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டிருந்தது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
• ஆரம்ப வேலை விடயங்கள் B 43 மற்றும் B 44 ன் கீழ் திட்டமிடலிற்கு (Setting out) ரூபா. 316,800 மற்றும் ரூபா. 154,000 வழங்கப்பட்டிருந்ததுடன், முன்னேற்ற அறிக்கைகள், தரக் கட்டுப்பாட்டு ஆய்வாளர் அறிக்கைகள் போன்றவை சமர்ப்பிக்கப்படாநிலையிலும், B 45 முதல் B 49 வரையிலான வேலை விடயங்களுக்கு ரூபா. 843,200 வழங்கப்பட்டிருந்தது. இதேபோல், நன்கு பயிற்சி பெற்ற சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர் பணியமர்த்தப்படுவார்கள் என்று கூறப்பட்டிருந்தாலும், அவ்வறில்லா நிலையில் வேலை விடயம் B 50 ஊடாக ரூபா. 198,000 வழங்கப்பட்டிருந்ததுடன், உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான செலவுகள் நிர்மாண விலையில் சேர்க்கப்பட்டிருந்தாலும், வேலை விடயம் B 66 ஊடாக ரூபா. 520,000 வழங்கப்பட்டிருந்தது. மேலும் வேலைத்	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தளத்துக்கான சேறு இல்லாத அணுகல் சாலைகளை தயாரிப்பதற்கும், அத்தகைய பணிகளுக்கும் ஒரு வடிகாலமைப்பை வழங்குதல் மற்றும் சான்றளித்தல் என்ற வேலை விடயம் B73 இன் கீழ், அத்தகைய நிலைமைகள் ஏற்பட்டதா மற்றும் செலவுகள் ஏற்பட்டதா என்பதை சரிபார்க்காமல் ரூபா. 231,000 செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், சூழ்நிலை ஏற்படாதபோதும், வேலை விடயம் B74 இன் கீழ் தற்காலிக அவசர நடைபாதைகள் கட்டுவதற்கு ரூபா. 162,500 செலுத்தப்பட்டிருந்தது.		
• காணியீன் பொருத்தப்பட்டை ஆய்வு செய்வதற்கும் மண் பரிசோதனை அறிக்கையைப் பெறுவதற்கும் ரூபா. 507,850 2018 ஜூன் 07 அன்று செலுத்தப்பட்டிருந்தாலும், அத்தகைய நிர்மாணம் எதுவும் நடைபெறாமை யால் சபை நிதிக்கு ஏற்பட்ட இழப்பாக கணக்காய்வு கண்டறிந்தது.	ஆலோசனை நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பிறகு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதாக.	கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்ட தற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்வரும் நடவடிக்கைளை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
சபைக்குச் சொந்தமான தாய் சேய் சிகசிச்சை நிலையம் அமைந்துள்ள காணியில் தலாஹேனா உப மாவட்டக் கட்டிடம் கட்டப்படும் செயற்திட்டம் ல், 2022 திசெம்பர 10, முதல் 2025 மே 30, வரை, ஆளுநரின் அங்கீகாரம் பெறாமலோ அல்லது எந்த நிர்மாணத்தையும் மேற்கொள்ளாமலோ, ஆலோசனை நிறுவனத்திடமிருந்து கையொப்பமிடப்பட்ட அறிக்கையை வழங்காமலோ, மொத்தம் ரூபா 3,500,000 ஆலோசனைக் கட்டணமாகவும், ரூபா 318,734 மண் பரிசோதனைக் கட்டணமாகவும் மொத்தமாக ரூபா 3,818,734 செலுத்தியிருந்தமை இனங் காணப்படாத நட்டமொன்றாகும்.	பதில் அளிக்கப்படவில்லை ..	நிர்மாணப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாதபோது பணம் செலுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிந்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.8 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பதவியணியில் 6 சிரேஷ்டநிலை வெற்றிடங்கள், 3 மூன்றாம் வெற்றிடங்கள், 42 இரண்டாம் நிலை வெற்றிடங்கள், 36 ஆரம்ப நிலை வெற்றிடங்கள் மற்றும் 01 பதவியணியில் 01 மிகை இருந்தது.	சிரேஷ்ட மட்டத்தில் உள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை 11 ஆகவும், இரண்டாம் நிலை ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை 185 ஆகவும் இருப்பதாக	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இடர் கடன், ஆதனங்கள் மற்றும் சைக்கிள் கடன்கள் பெற்ற 563 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 105,481,400 2024 திசெம்பர் 31, இல் உள்ளவாறு நிலுவையில் உள்ளது. இதில் ரூபா 1,704,976 சேவையை விட்டு வெளியேறிய, ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளிடமிருந்து நிலுவையில் உள்ளது, மேலும் 21 அதிகாரிகளிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேல் நிலுவையில் இருந்த ரூபா 64,485 கடன் நிலுவைத் தொகை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கடன் மீதிளைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஷஷ